1161

No. M. 1630. **FEBRUARY. 1923.**

சுயம்பிரகாசத்துணை.

ஞானசூரியன்

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1 } துந்துபி-ஹூ மாசிமீ 1உ / 1923ஹூ பிப்ரவரிமீ 12உ { இதழ் 11

Vol. 1 | No. 11

பொருளடக்கம்.

விஷயம்.	பக்கம்.
கடவுள் வணக்கம்	241
ஆத்மஞானத்தின் உயிர்—அ. முகம்மது தாஹிர்சாஹிபு, வழுத்தூர்	242
தென்னிந்திய முஸ்லிம்கள்—தாருல் இஸ்லாம்	244
சுகாதாரம்—எஸ். வி. ஜி. பாலன், திருவாரூர்	247
ஆசிரியரிலக்கணம்—வேதாந்த பாஸ்கரன்	249
தேகப்பயிற்சி—ப. வீரப்பத் தஞ்சவராயன்	254
நன்றிமறவேல்—எஸ். வி. ஜி. பாலன், திருவாரூர்	256
கோபம்—ப. வீரப்பத் தஞ்சவராயன்	258
மனுநீதிச் சோழன்—வடலூர் வள்ளல்	261
...வத்தியம்—க. ஞானபூபதி	264

...த்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

"ஞான சூரியன்"

சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு	வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட	ரூ 1—8—0
பினாங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு		ரூ 2—0—0
தனி சஞ்சிகை விலை		ரூ 0—3—0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாம் மேலும முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். ஏனெனில் மணியார்டர் செய்தால் ரூ 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய் எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கத்திற்கு ஒருமாசத்திற்கு	...	ரூபா	8—0—0
அரை பக்கத்திற்கு	,,	,,	5—0—0
கால் பக்கத்திற்கு	,,	,,	3—0—0

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு $12\frac{1}{2}$ ரூ. வீதம் கழித்து வாங்கப்படும் எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும். நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு,

பத்திராதிபர்.

முன்பணமாக ரூபாய் 25 (இருபத்தைந்து) செலுத்தும் ஜீவிய சந்தாதாரர் (Life Subscribers) கட்கு எக்காலத்திலும் பத்திரிகை இனமாக அனுப்பப்பெறும். அவர்கள் பெயரை ஒவ்வொரு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பெறும்.

கருணையானந்த ஞானபூபதி,
பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசர் சத்துணை.

ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்)

(All Rights Reserved.)

மலர் 1.] துந்துபி வரு மாசிமீ 1வ. [இதழ் 11.

கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
ஞானிலத் துதித்தமா னிடர்கள்
ஞானெனு மகந்தைக் காரிருட் படலம்
நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

உரையால் நினைவால் அருள்நோக்கால் உலக ருணர்வைப் பிணித்தமல
இருளா னதனை அறமாற்ற எழுந்த ஞான சூரியனே. (பிரபுலிங்கலீலை)

ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னைபோல
நீதிபெருங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியையென் னுயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம்.

(தாயுமான வள்ளல்.)

ஞானசூரியன்.

துந்துபி௵ மாசிமீ 1௳.

ஆத்ம ஞானத்தின் உயிர்.

(220-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகாயமோ ஏற்கனவே உள்ளது வெளியிலுண்டான தோற்றங்கள் மனதின் சாக்ஷியாகவும் மனதில் உண்டாகிற தோற்றங்கள் விருத்தியின் சாட்சியாகவும் இருக்கிறது.

இந்த விருத்தியின் சாட்சியானது மனதைவிட்டு ஒழிந்தவுடன் களங்கமற்ற கண்ணாடியில் அதற்கு முன்னால் உள்ள பொருள்கள் யாவும் தோற்றுவதுபோல் அந்த தெளிவான மனவெளியில் வெகு துலையிலுள்ள நக்ஷத்திரமாகிய நூதனமான உலகங்கள் தோன்றும் அதில் ஒவ்வொன்றிலுமுள்ள ஆச்சரியங்களையும் பூமியிலுள்ள அதிசயங்களையும் காணலாம். இதை இல்மே இஸ்ருக்கு என்று சொல்வதுண்டு இதில் முடிவாகிய தேர்ச்சிக்கு பின்னால் சூக்குமமான அவர்கள் சனனமாகிற விதமும் மறுமையின் இரகசியங்களும் தெரியவரும். இந்த அப்பியாசத்தைச் செய்யச் செய்ய இதற்கு மேம்படியான ஞானங்கள் வெளியாகும் இதற்கு இல்மே முக்காசிபா என்று பெயர். மதவைராக்கியத்தில் செல்லவேண்டாம் அது சன்மார்க்கத்தைப் போதித்து பகையை உண்டாக்கும் அநேகர் இந்த ஞானங்களை வாசித்திருந்தும் தங்கள் தங்கள் மதத்தை சரியாய் வைத்திருக்கிறார்கள். எவர்கள் இந்த ஞானத்தை வாசித்தால் தங்கள் மதம் தப்பிப்போகும் என்று எண்ணுகிறார்களோ அவர்கள் இந்த நூலை வாசிக்கக்கூடாது. இந்த ஞானத்தை மதத்தின் எல்லைக்கு உள்படுத்தி அதின் இரகசியங்களை மறைத்து தந்திரமாகவும் பரிபாஷையாகவும் எழுதுவதால் அநேகர்களுக்கு விளங்கிக்கொள்ள இயலாது. சில

ஞானிகள் மனோவிருத்தியின் சாக்ஷியை அழிக்க ஏலாதென்கி ருர்கள். ஏனென்ருல் உதிப்பை யொருவரும் தடுக்கமுடியாது. உதிப்போ கடவுளின் தூதாகவிருக்கிறது. பூமியில் தோன் றும் நிழலைப்புதைக்கவும் ஜலத்தில் தோன்றும் நிழலை அழிக்க வும் முயற்சிப்பது கூடாத காரியம் என்கிருர்கள். இது ஞானத் துக்குச் சரிதான். ஏனெனில், தற்போதத்தை விட்டு ஒழிந் ததுபோல் அருட்போதத்தையும் விட்டு ஒழிவார்கள் அதா வது தானென்பதையும் தான் கடவுள் என்பதையும் விட்டு விடுவார்கள் கடவுள் என்பதும் தனக்கு மாய்கையாக இருப்ப தால் தானேயுண்டாகும் தெய்வீக நாதத்தால் அருட்போதத் தையும் விட்டுவிடுவார்கள். ஞானிகள் ஒன்றையும் உண்டாக்கு கிறதும் இல்லை அழிக்கிறதும் இல்லை. சில யோகிகள் விருத் தியை விருத்தியைக்கொண்டே நசிக்கவேண்டும். சுத்த ஆகாய மான மனவெளியில் மனதின் சங்கற்பங்களையும் விடயங்களை யும் பழக்கத்தால் தலையெடுக்காமல் நாசம் செய்துவிடலாம் என்கிருர்கள். இருக்கிறது அழியாது இல்லாமலிருந்து வரு கிறது அழியும். ஆகையால் சில ஞானிகள் தன்னில் கேட்கும் தொனியை மனமுயற்சியால் கண்டுபிடித்து பிரணவ சாதனை செய்து புலன்பொறிகளை அடக்கி மனதின் பல எண்ணங்களை நாசம்செய்து விடுகிருர்கள். இது பிரம்மஞானத்தைச் சேர்ந் தது இதன் இரகசியங்களை இவ்விடத்தில் பேசுகிறது தகுதி யல்ல மேலும் இது இராஜயோகத்தைச் சேர்ந்தது ஆகாயத் தில் காற்று அசைவதுபோல் மனதில் அறிவு அசையும் அதில் பிரணவ அம்சமான அறிவும் காற்றின் அம்சமான அசைவும் இருக்கிறது. நமது இருதயத்தில் பிராண வாய்வின் அசைவு இருக்கிறவரையில் மனதின் சங்கற்பம் நீங்காது. ஆகையால், சில யோகிகள் ஹடயோகத்தினுல் சுவாச அப்பியாசம் செய்து,

(இன்னும் வரும்)

அ. முஹம்மதுத்தாஹிர் சாஹிபு, வழுத்தூர்.

தென்னிந்திய முஸ்லிம்கள்.

இந்தியாவின் ஜனத்தொகை 35 கோடியில் முஸ்லிம்கள் மட்டும் ஏழு கோடிக்குமேல் இருக்கிறார்கள்; இவர்களுள் தென்னாட்டு வாசிகளான தமிழ் முஸ்லிம்கள் சுமார் இருபத்தைந்து இலக்ஷத்துக்கு அதிகமாயிருக்கிறார்கள். இவர்களன்றி இன்னும் சிலோன், பர்மா, சிங்கப்பூர், பினாங்கு முதலிய வேற்றிடங்களிலும் தமிழையே தமது தாய்பாஷையாகவுடைய முஸ்லிம்கள் எத்தனையோ இலக்ஷக்கணக்காயிருந்து வருகின்றனர். தமிழ் மொழியைத் தமது தாய் பாஷையாகவுடைய இந்த முஸ்லிம்களுள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மருக்குத் தமிழைத்தவிர வேறொரு பாஷையும் பேசவும் தெரியாது. அன்னிய பாஷைகளை அவர்கள் கற்றுக்கொள்வது பிறகு இருக்கட்டும்; தமது தாய்பாஷையாகிய தமிழிலேனும் தக்க பாண்டித்திய முண்டோவெனின் அதுவும் அவர்களிடம் குதிரைக் கொம்புபோல் அருமையாகவே காணப்படுகின்றது. ஆரம்பக் கல்விக்குரிய அவ்வளவு தமிழ் வாசனையுடன் அதி சாதாரணமாக எழுதப்படிக்கத் தெரிநதவர்கள் நூற்றுக்குப் பத்துத்தான் இருப்பார்கள்; மிகுதிப்பேர்களுக்கு எழுத்து வாசனையே இன்னதெனத் தெரியமாட்டாது சிறிது எழுதப்படிக்கத் தெரிந்த அந்த நூற்றுக்குப் பத்து மனிதர்களுள்ளும் நன்றாகச் செந்தமிழில் இலக்கண இலக்கிய ஞானமுள்ளவர் ஒருவர், இருவர் இருப்பரோவென்பதுதான் எமக்கு மிகப்பெரும் சந்தேகமாயிருக்கிறது. தமிழைத் தமது தாய் பாஷையாகவுள்ள முஸ்லிம்களுள் இலக்கண இலக்கிய ஒழுங்குடன் இப்பாஷையைக் கற்றுணர்ந்தவர் இலக்ஷத்தில் ஒருவரேனும் இருப்பாரென்று எம்மால் உறுதியாகக் கூறமுடியாது. நாவலரென்றும், பாவலரென்றும், புலவரென்றும், பண்டிதரென்றும், கவிவாணரென்றும், கல்விக் களஞ்சியமென்றும் பல முஸ்லிம்கள் தங்களைக் கூறிக்கொள்வதுண்டு. ஆனால், அவர்களுக்கெல்லாம் தமது பெயரையும் தகப்பன் பெயரையும் தங்கள் ஊரின் திரு

நாமத்தையும் செவ்வனே இலக்கண வழுவில்லாமல் எழுதத்தெரி யுமோவென்பது தான் எமக்குச் சந்தேகம்.

ஆனால் இப்படிப்பட்ட கர்ணபரம்பரையான கல்விமான்க ளென்னும் கவிவாணரெல்லாம் கவிபாடுவதில் மட்டும் மிருதம் கைதேர்ந்தவர்போல், "கடபடாம்" என்று சொல்லிப் படாடோப டம்பம் பண்ணிப் பார்த்தவர் திடுக்கிடப் பகட்டுதல் செய்வ துண்டு. ஆனால் அவர்களுடைய அரிய கவிகளையெல்லாம் அழ கிய ஏட்டில் எழுதிப் பார்த்தால்தான் எத்தனை எழுத்துப் பிழை யுண்டென்னும் இரகசியம் வெளியாகும். "படித்தவன் பாட் டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என் னும் பழமொழி இவர்களுக்கே சாலவும் தகும். தமிழிலும் இலக்கண இலக்கிய விதிகளுண்டென்றும், அவ்விதிகளுக்கு முரண்படாமல் எழுதுவதும் பேசுவதுந்தான் செந்தமிழுக்கு அழகு தருமென்றும், அந்த உண்மை ஞானத்தை அவர்கள் உணர்வதில்லை. இப்படிப்பட்ட போலிப் புலவர்களின் கல்வி யறிவைச் சமீபத்தில் சென்று ஆராய்ச்சி செய்வோமாயின் அவர்க ளெல்லாம் பெரும்பாலும் மற்றொரு முறை "அரிச்சுவடி" படிக் கும் ஆரம்பப் பள்ளிக்கூடத்துக்குத்தான் செல்லும்படி நேரிடு மென்று யாம் பெரிதும் அஞ்சுகிறோம். இலக்கணவழுவில்லாமல் எழுதவும் பேசவும் தெரிந்தவர்கள் இத்தென்னாட்டு முஸ்லிம்க ளுள் இரண்டு மூன்று முஸ்லிம்களேனும் இருப்பரோ வென்பது தான் எமக்கு மிகப்பெரும் வியப்பை உண்டாக்குகின்றது.

தமிழ் எழுத்தில் எதை எழுதினாலும் அஃதெல்லாம் தமிழ் தான் என்று பலர் தவறாக எண்ணியிருக்கின்றனர். தமிழ் எழுத் தில் எதை எழுதியபோதிலும் அஃதெல்லாம் தமிழாய் விடமாட் டாது. மற்றெல்லாப் பாஷைகளிலும் இருப்பதேபோல் தமிழி லும் இலக்கண இலக்கிய முறைகளுண்டு; அம்முறைகளுக் கிணங்க எழுதுவதுதான் தமிழ்ப்பாஷையாகும். முன்னொரு சமயம் சென்னையிலுள்ள ஒரு சாரார் "பேசுவதுபோல் எழுதவேண்டும்"

என்று சூக்ஷுரலிட்டார்கள்; ஆனல் அது முடியாமற் போயிற்று. பேசுவதுபோல் எழுதுவது எந்த பாஷைக்கும் ஒத்துவரமாட்டாது. பேச்சுவழக்கை எட்டுவழக்காக்கினல் அஃதொரு வேறு பாஷையாகத்தான் முடியும். வாதத்தின் நிமித்தமாயாவது பேசுவதைப்போல் எழுதலாமென்று ஒத்துக்கொண்ட போதிலும் தென்னட்டிலுள்ள "ராவுத்தர்"களும் "மரைக்காயர்"களும் பேசும்பேச்சை யாரேனும் தமிழ்தெரிந்தவர் சிலாகித்துக்கொள்வாரோவென்று சொல்வதற்கில்லை. இவர்கள் பேசும் தமிழைக்கண்டு ஒவ்வொரு தமிழ் மாணவரும் நாணமடையாம லிருக்கவேமாட்டாரென்று நிச்சயமாக நம்புகிறோம். இவர்களுடைய தமிழறிவு தான் இப்படியிருக்கின்றதே; இவர்கள் இருக்கட்டும்; இவர்களுக்கு மதபோதகர்களாய் விளங்கிவரும் மௌல்விகளின் நிலைமையைச் சிறிது கவனிக்கத் துணிவோமாயின் அது மகா வெட்ககரமான விஷயமாகத்தான் முடியும். இந்த ஆலிம்களுக்கெல்லாம் தமிழ் எழுத்தின் நாமதேயமே இன்னதெனத் தெரியமாட்டாது. இவர்கள் இந்தக்காபிரான(?) பாஷையைப் படிக்கவும் ஒரு சிறிதும் முயல்வதில்லை. அவர்களுக்கெல்லாம் தமிழென்னும் மொழியில் பேசுவது மட்டும் சிறிது தெரியுமாதலின் அதை வரிவடிவில் எட்டில் எழுதுவதற்கு முடியாமல் அரபு எழுத்தால் தங்களுடைய ஆபாசமான அடுப்பங்கரைத் தமிழை" எழுதி அதற்கு "அரபுத்தமிழ்" என்னும் அழகிய திருநாமமும் சூட்டியிருக்கின்றனர். இப்படிப்பட்ட அரபுத்தமிழில் எழுதிய அவர்களுடைய நூல்களுக்கு அந்த அந்த நூலாசிரியர் வந்தால்தான் பொருள் தெரிந்துகொள்ளலாம். தமிழ்ப் பாஷையுணர்ந்த வேறெந்தமனிதனும் அவர்களுடைய அருமையான அழகிய அரபுத்தமிழை அறிந்துகொள்வது முடியாது.

இப்படிப்பட்ட மௌல்விமார்கள் தாங்களே தமிழை அறியாதபோது மற்றைமனிதர்களுக்கு எவ்வாறு செந்தமிழில் நமது தீனுல் இஸ்லாத்தின் அரிய பெரிய விஷயங்களையெல்லாம் எழுதியும் சொல்லியும் விளக்கப் போகின்றனர்? தென்னட்டு முஸ்லிம்

களின் நன்மைக்கென்று தமிழ் ஜில்லாக்களில் ''மஜ்லிஸுல் உலமா'' என்றொரு பெருங்கூட்டம் எப்பொழுதாவது எங்கேயாவது எவர்களாவது சேர்ந்து, தமிழ்நாட்டில் தமிழ் நாட்டினரின் பணஉதவியைக்கொண்டு பதினாயிரக் கணக்கான ரூபாய் செலவு செய்து கூடி, அங்கே ஆங்கிலத்திலும் ஹிந்துஸ்தானியிலும் பேசிவருகிறார்கள். அப்படிப்பட்ட மஜ்லிஸுல் உலமாக் கூட்டத்தில் சில ஆலிம்கள் தமிழிலும்(?) பேச முன்வருகின்றனர்! ''நாம் சாதாரணமாய் வீட்டில் பேசுகிறோமே, அதுதானே தமிழ்'' என்று வாதிக்கக்கூடிய மௌலவிகள் பிரசங்க மேடைமீது ஏறிப் பிரசங்கமாரி பொழியும்போதுதான் மிக வேடிக்கையாயிருக்கிறது. பேப்பர் ரிப்போர்ட்டர்களாலும் (பத்திரிகை நிருபர்களாலும்) இன்னதெனக் கண்டுபிடிக்க முடியாதவிதமாய் அவ்வளவு அழகுடன் பேசுகின்றனரே அதுதான் ஆலிம்களின் செந்தமிழ்! இப்பொழுதும் அந்த மஜ்லிஸுல் உலமாவில் உத்தியோகம் வகிப்பவர்களுள் (உபதேசிகள் உள்பட) எத்தனை மௌலவிகளுக்குத் தமிழில் செவ்வனே எழுதவும் படிக்கவும் தெரியுமென்று அறிய விரும்புவோமாயின் அவர்களின் தொகையை விரல்விட்டுத் தான் எண்ணவேண்டியிருக்கும். இப்படிப்பட்ட அழகிய செந்தமிழ் ஆலிம்களுள் சிலர், ''வரவேற்புப் பத்திரம்'' படிக்கவும், ''வாரப் பத்திரிகை'' பதிப்பிக்கவும் முன்வரும்போதுதான் எமக்கு இனியில்லா வியப்புண்டாகின்றது.

(இன்னும் வரும்)

தாருல் இஸ்லாம்.

சுகாதாரம்.

(40-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகாரம் உட்கொள்வதிலும் அவரவர் மனம் போனபடியெல்லாம் தக்கது தகாதென்றுணராது கண்டதைப் புசிக்கிறார்கள். அது முற்றும் தவறு. ஏனெனில், எப்பொருளும் மெய்ப்பொருளெனக்கொண்ட இறைவன் சர்வஜீவப் பிராணிகட்கும் தலைவனாகிய நின் இன்னின்னதைத்தான் புசிக்கவேண்டுமென்ற வரை

யறுத்திருக்கின்றார். மேலும் அதை மீறின் அததற்கேற்ற தோஷத்தையும் நன்கு குறிப்பிட்டிருக்கின்றார். உலகில் சிலர் ஒரே கடவுளால் சிருட்டிக்கப்பெற்றதும் சகோதர சகோதரி போன்றதும் பகுத்தறிவில்லாததுமான பறவை, ஆடு, கோழிகளைக்கொன்று ஆகாரமாக உட்கொள்கின்றார்கள். அதை என் அப்படிச் செய்கிறீர்களென்று கேட்பின் எங்கட்கு வழக்கமாய் போய்விட்டது. எங்கள் மூதாதைகள் கைப்பற்றியதை நாங்களும் கைப்பற்றுகிறோமென்றும், அதைவிட்டு மரக்கனிகளைத் தின்றால் தேகபலமின்றி பலஹீனமாய்ப் போகிறதென்றும் எங்கள் மதத்திற்கு அவ்வாறு கொன்று சாப்பிடுவதால் எவ்வித பாவமுமில்லை அவ்வுயிர்களை நாங்கள் மோக்ஷ லோகத்திற்கு அனுப்புகிறோமென்றும் பலர் பலவாறாகக் கூறுகின்றார்கள். அந்தோ! அவைபாவும் வாலிழந்த நரியைப்போலென்றும் மூக்கையிழந்தவன் தனக்கு நேரே சொர்க்கலோகம் தெரிகிறதென்று கூறி பிறரை தன்னைப்போலாக்குவதற்கு முற்படுவதை ஒக்குமேயன்றி வேறென்ன சொல்வது.

ஒரே தாய்வயிற்றிற் பிறந்ததைப்போன்று ஒரே கடவுளால் சிருட்டிக்கப்பெற்ற நாம் அவ்வாறு செய்வது தகுமா அன்றியும் அது முழுமுதற் கடவுட்குத்தான் சம்மதப்படுமா? அவ்வாறின்றி தங்கள் ஊன்பெருக்க ஊனைக் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற பிடிவாத முள்ளவர்கட்கு அறிவுறுத்தற் பொருட்டே தொக்க, விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே புலன்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்றார். சிலர் யாகம் செய்வதில் எவ்வித பாவமும் அடிபட்டுப் போகிறதென்கிறார்கள். அப்படி சொல்லிக்கொண்டு பல்லுயிரைப் பலிகொள்வதானது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டதை யொக்குமேயன்றி வேறென்னென்பது. அவ்வாறு செய்வதும் தகாதெனவே "அவிசொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்ற னுயிர் செகுத்துண்ணாமை நன்று" என்றார் நம் தெய்வப்புலமை திருவள்ளுவரும். புலாலுண்ணாவிடின் தேகபலம் குன்றிப்போகிறதென்னின் அதுவும் எவ்வாற்றானும் பொருந்

தாது ஏனெனில் மாமிச உணவையே உட்கொண்டுவந்த மேனுட்டார் அதிலுல் பல கொடிய தொத்துநோய்கள் உற்பத்தியாகின்றதென்பதைக் கண்டுபிடித்து வாரத்திற்கிரண்டு மூன்றுநாள் அவ்வாகாரமே உட்கொள்ளக் கூடாதெனவும் கூடியவரை பலத்தைக் கொடுக்கக் கூடியது கந்தமூலங்களேயென்றும் வெளியிட்டிருக்கிருர்கள். மேலும் அமெரிக்காவில் இரண்டு கலாசாலையில் பரிக்ஷார்த்தமாக ஒரு கலாசாலை மாணவர்கட்கு புலாலுணவும் இன்னெரு கலாசாலை மாணவர்கட்கு புலாலின்றியவுணவும் ஒருவருடம் வரை கொடுத்து வருடக்கடைசியில் இருகலாசாலை மாணவர்களின் தேகதிடத்தை சிகிச்சாதிகாரி பார்த்தபோது புலாலுண்ணுத மாணவர்கள் தேகதிடமாயும், தேஜஸ் உள்ளவர்களாயும் சுறுசுறுப்பாயு மிருக்கவும் ஏனைய மாணவர்கள் பல கொடிய தொத்து வியாதிகளால் பீடிக்கப்பட்டு சோம்பலா யிருந்ததாயும், விஷயபோதினியினு லறிகிறோம் மேலும் நமது நாட்டிலேயே இண்டியன் சாண்டோ என்று மேனுட்டாராலும் புகழ்ப்பெற்ற நமது ராமமூர்த்தி அவர்களின் ஆகாரம் கந்தமூலங்களை யுடையதேயன்றி புலாலுள்ளதன்று, இன்னும் பிராமணருட் பலர் அரோக திடகாத்திரர்களா யிருக்கவில்லையா, ஆகலின் மாமிசமில்லாததால் தேகபலம் குன்றிப் போய்விட்டதென்பது ஓநாய் ஆட்டின்மேல் குற்றங்கூறிக் கொன்ற கதையை ஒக்கும்.

(இன்னும் வரும்)

எஸ். வி. ஜி. பாலன், திருவாரூர்.

ஆசிரியரிலக்கணம்.

(225 - ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு சின்னுட்கள் சென்றபின்னர் தங்கள் அன்பிற்கிசைந்த கதீஜாநாயகி அவர்களோடும் மற்றெவர்களோடும் பொருந்தி உறவாடாமல்,

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனுய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப் பேன். எனவும்

கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்க ளேனும்
கன்லவாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனி யாகித்
தனியே யிருப்பதற் கெண்ணினேன்"

எனவும் கூறியதற் கிணங்க, நபிநாயகம் அவர்கள் தனியே யிருப்பதற்கெண்ணி, எந்த மலைகளிலும்போய் ஏகமாய் வசிப்பார்கள். குளிர்ச்சிபொருந்திய ஹிரு மலையில் இரண்டுநாள் நான்குநாள் ஏகமாய்த் தங்கியிருந்து கதீஜாநாயகம் அவர்கள் இருக்கும் வீட்டிற்கு வருவார்கள். இவ்வாறுன நாட்களில் இளமயிலாகிய கதீஜா நாயகி அவர்கள், தங்களுடன் வர அந்த ஹிரு மலையிற் சென்று தங்கியிருந்து எவ்வித வடிவமுந் தோற்றுமல் பகற்காலத்தைக் கழித்து வீட்டிற்கு வருவார்கள்.

மூலபிதாவாகிய நபி ஆதம் அலைகிஸ்ஸலாம் அவர்கள் மனித வடிவமாய் இப்பூமியில் அவதரித்த ஆறுயிரத்து நூற்று இருபத்து மூன்று (6123) வது வருடத்தில், நபிநாயகம் அவர்களுக்கு வயது நாற்பதி(40)ல் நிகழும் றபீயுல் அவ்வல் மாதம் பத்தாந்தேதி திங்கட்கிழமை இரவில்; ஹிருமலையில் ஏகமாக வீற்றிருக்கும் நமது நாயகம் அவர்கள் எதிரில் ஜிபுறீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள் (தேவதூதர்) பிரசன்னமாகி, ஆதிநாயகன் சலாமும் சொல்லி நவரத்தின கசிதமயமான ஒரு வஸ்திரத்தைக் கையில் எடுத்து நாயகம் அவர்கள் வதனத்தை நோக்கி, "லாயிலாக இல்லல்லாகு முகம்மதுர் றசூலுல்லாஹி" என்னுங் கலிமாவைச் சொல்லி அவர்கள் வலக்கரத்தில் வைத்து, நாயகமே! தங்களுக்கு அல்லாகுத்தாலா இன்று நபி யென்னும் பட்டத்தைத் திருவுளமகிழ்ந்து அருளியிருக்கின்றுன். ஆகலால், வேதத்தை ஓதுங்களென்று சொன்னுர்கள்.

நாயகம் அவர்கள், சிபுறீல் அலைகிஸ்ஸலாம் அவர்களை நோக்கி, குரிசிலே! நான் ஓர் எழுத்தையும் அறியமாட்டேன்; வேதத்தையும் ஓதினவனல்லேன் என்றனர். சிபுறீல் அலைகிஸ்ஸலாம், நாயகம் அவர்களை இறுகக் கட்டியணைத்து ஓதுங்கள்? என்றார்கள். அப்போதும் யான் யாதொன்றையும் அறியேன் என்றார்கள். பின்னும் அதிகமாகக் கட்டியணைத்து ஓதுங்கள்! என்க, நான் வேதத்தைக் கண்ணாற் பார்த்ததும் காதினாற் கேட்டதுமில்லையே என்றார்கள்;

அதன்மேல் இருதோள்களும் நெருங்கவும், சரீரம் தளரும்படியாகவும், கைகள் செவக்கவும் இறுகக் கட்டியணைத்து ஓதுங்கள்! என்று சொன்னார்கள். (*)நெருங்கக் கட்டியணைத்த பின், நாயகம் அவர்களுக்கு வேதத்தின் உணர்வு உதயமாகிப் பெருகி, நான் ஓதவேண்டியது யாது? என்க. "இக்றவ்" என்னும் சூறத்திலிருந்து நான்கு ஆயத்து "மாலம் யகூலம்" என்பது வரையில் ஓதும்படிக் கூறினார்கள்.

நபிகள் நாயகம் அவர்கள் அட்சரந்தப்பாமல், வார்த்தைகளின் ஒழுங்கு குறையாமல், இராகத்தின் இனிய தொனியால் பட்ட மரங்கள் தளிர்க்கும்படியாக சிபுறீல் அலைகிஸ்ஸலாம் அவர்கள் இருதயகமலம் குளிரும் வண்ணம், பதவுரை, கருத்துரை விசேடவுரை முதலிய சகல விபரங்களையும் மனதிற் பதித்து,

("இக்றவ் பிஸ்மிறப்பிக் கல்லதீ ஹலக், ஹலக்கல் இன்சான மின் அலக், இக்றவ் வறப்புக்கல் அக்றமுல்லதீ அல்லமபில்க் கலமி, அல்லமல் இன்சான மாலம்யகுலம்") என்று திருவாய் மலர்ந்து ஓதினார்கள்.

மேற்கூறியுள்ள இரண்டு அற்புதங்களும் முறையே நபன பரிச தீட்சைகளால் நிகழ்ந்தவையென்று உணரப்பெறும். அன்றியும், குருமூர்த்தியானவர் சீடனது பரிபாக பக்குவத்தை

* இவ்வாறு நெருங்கக்கட்டி யணைத்தவுடன் பாபவிமோசனமாகி, ஞானோதய முண்டாவதற்குப் பரிசதீட்சையென்று பெயர்.

யறிந்து, முற்கூறியுள்ள அறுவகைத் தீட்சைகளையும் கிருபையுடன் செய்தாலன்றி, சீடன் ஈடேறமுடியாது. இதற்காகத்தான் குருபரன்மீது மாறுத விசுவாசம் வைத்திருக்கவேண்டுமென பன்னூற்களும் ஓலமிட்டுக் கொண்டிருக்கின்றன. சீடன் வணங்கிப் புகழ்வதால் குருவுக்குப் புகழ் ஏற்படும் என்பதற்காக ஆன்ரோர்கள் நூலெழுதி வைக்கவில்லை; குருவை அதிகமாக வணங்கி விசுவாசித்தால், அவர் சீடன்மீது கருணைபாலித்துக் கொண்டிருப்பார். அதனால் சீடன் உய்வதற்கு ஏது வுண்டாகுமென்றே அவ்வாறு எழுதி வைத்திருக்கிறார்கள்.

சிவஞானவள்ளல்.

சிவத்துவ மசி சிவோக மத்துமி சிவோகமத்தி
நவத்துதி வாக்கியத்தை நவையறு சீடற்கோதி
யவற்றுறு பொருளைத்தேற்றி யாங்கவன் கிலேசம்போக்கிப்
பவத்துயர் நசித்தான் றன்னைப் பரமவா சிரிய னென்ப.

குருத்தியானம்.

(1) ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் ஸ்மராமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் பஜாமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் நமாமி
ஸ்ரீமத் பரப்ரஹ்ம குரும் வதாமி.

(இதன்பொருள்) பரப்ரஹ்மமாகிய குருவைத் தியானிக்கிறேன். அவரையே பூஜிக்கிறேன் அவரையே வணங்குகின்றேன். அவரது புகழையே பேசுகின்றேன்.

(2) த்யாந மூலம் குரோர் மூர்த்திம்
பூஜா மூலம் குரோ: பதம்
மந்த்ர மூலம் குரோர் வாக்யம்
முக்தி மூலம் குரோ: க்ருபா.

(இதன்பொருள்) குருவின் சொருபமானது தியானங்களுக்கு ஆதாரமானது. குருவின் திருவடிகள் பூஜிக்கத்தக்கன. குருபிரான் திருவாக்கியமானது மந்திரமாக மதிக்கத்தக்கன. குருவினது கிருபாநோக்கமானது முத்திக்கு ஆதாரமானது.

(3) குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு:
குருர் தேவோ மஹேஸ் வர:
குருஸ் ஸாக்ஷாத் பரப் ரஹ்மம்
தஸ்மை ஸ்ரீ குரவே நம:.

(இதன்பொருள்) குருவே பிரம்மா, குருவே விஷ்ணு, குருவே தேவன், குருவே மகேசுரன், குருவே சாக்ஷாத் பரப்ரஹ்மம், ஆதலால் குருபிரானை வணங்குகின்றேன்.

(4) குருர் சிவோ குருர் தேவோ
குருர் பந்து: சரீரி ணாம்
குரு ராத்மா குருர் ஜீவோ
குரோ ரந்யம் நவித்யதே.

(இதன்பொருள்) குருவே சிவம், குருவே தேவன், குருவே பந்து, சீடர்கட்கு குருவே ஆத்மா, குருவே சீவன் குருவைத் தவிற வேறொன்றுமில்லை.

(5) நஸுகம் வேத சாஸ்தி ரேஷு
நஸுகம் மந்த்ர யந்த் ரகே
குரோ: ப்ரஸாதா தந்யத்ர
ஸுகம் நாஸ்தி மஹி தலே.

(இதன்பொருள்) வேதசாஸ்திரங்களிலும் மந்திர யந்திரங்களிலும் சுகமில்லை. இவ்வுலகில் குருவின் அருட்பிரசாதத்தைத் தவிர சுகமளிப்பது ஒன்றுமில்லை.

(6) நகுரோ ரதிகம் ஜ்ஞாநம்
நகுரோ ரதிகம் தப:
நகுரோ ரதிகம் த்யாநம்
நாஸ்தி தத்வம் குரோ: பரம்.

(இதன்பொருள்) குருவுக்கு மேலான ஞானமில்லை. குருவுக்கு மேலான தபசு இல்லை. குருவுக்கு மேலான தியானமில்லை. குருவுக்கு மேலான தத்துவமில்லை.

(இன்னும் வரும்)

(வேதாந்த பாஸ்கரன்.)

தேகப்பயிற்சி.

தற்காலத்தில் எத்தனைப்பெரும் வல்லமையுடைய சத்துருக்களையும் அழிக்க வன்மை வாய்க்கப்பெற்றவர்களும் ஓர் சிறிய தீவில் இருந்துகொண்டு உலகத்தில் பெரும்பான்மை யான பாகத்தை அடக்கி ஆளும் சக்தி பூண்டவர்களும் நமது அரசாங்கத்தாராகிய இங்கிலீஷ்காரர்களே என்பது பிரசித்தம். அவர்கள் அவ்விதமாக தேகதிடமும் மனோதிடமும் உள்ளவர்களாக இருப்பது சமசீதோஷ்ணப் பிரதேசத்தில் வசிக்கிறவர்களாயும் மாம்சம் உண்பவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதே அல்ல. ஏனென்றால், உஷ்ணதேச வாசிகளாயும் சாகபக்ஷணிகளாயும் இருந்தும் தற்காலத்திய துப்பாக்கி முதலிய கூடமான ஆயுதவலியின்றியும் சத்துருக்களை அழித்தும் பலவித வீரச்செயல்களையும் நமது முன்னோர்கள் செய்யவில்லையா? தற்காலத்திலும் உலகம் முழுவதும் சென்று தனது வீரச்செயல்களைக் காட்டிவரும் ராமமூர்த்தி சாண்டோ முதலிய வீரர்கள் இல்லையா? சமீபகாலத்தில் நடந்த மஹாயுத்தத்தில் இந்து சேனைத்தலைவராய்ச் சென்ற ஸர் பிரதாப்சிங்கு முதலிய போர்வீரர்கள் ஜர்மானியரோடு போர்புரிந்து ஜெயம் காட்டவில்லையா? ஆதலால் ஆங்கிலேயர் தைரியசாலிகளாயிருப்பதற்கு அவர்கள் தேகப் பயிற்சிக்காக காட்டி வரும் சிரத்தையும் முக்கியமானதாகும்.

இளம்பிராயம் முதற்கொண்டே இங்கிலீஷ்காரர்கள் தங்கள் குழந்தைகளை சரீர திடவிருத்திக்கான பயிற்சிகளில் பழக்குகிறார்கள். மாணவர்கள் ஒவ்வொரு நாளின் பெரும்பாகத்தையும் தேகப்பயிற்சியிலேயே கழிக்கிறார்கள். சிலநாள்களில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் கூட அதே வேலையாய் இருப்பார்களாம்.

தேகப்பயிற்சிக்காக காலையிலாகிலும் மாலையிலாகிலும் ஒரு காலத்தைக் குறித்துக்கொண்டு அந்தவேளையில் தவறாமல் தினந்தோறும் தேகத்திற்கு வலிமையைத் தரத்தக்கதான ஏதேனும்

சில அப்பியாசங்களைச் செய்யப் பழகுதல் வேண்டும். முதல் நாள் செய்த அப்பியாசத்திற்கு மறுநாள் செய்வது குறைவாய் இருக்கக்கூடாது. ஒவ்வொருநாளும் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகப்படுத்திக்கொண்டு வருவது நலம். அமிதமான தேகப் பயிற்சியும் ஆகாது, ஏனென்றால் அமிதமான பிராணவாயு உட் செல்லுமானல் அங்குள்ள கருவிகளுக்குத் தீங்கிழைத்து அழித்து விடும்,

தேகப்பயிற்சி செய்வதால் சரீரத்துக்கு உண்டாகும் நன் மைகளில் அடியில் கண்டன சிலவாம்.

தோலின் கீழ்ப்புறத்தில் உள்ள நுண்ணிய இரத்தக் குழாய் கள் சுருங்கி, தாம் செய்யவேண்டிய வேலையை விடுத்து மற்ற உட்கருவிகளுக்கு அமிதவேலையைக் கொடுத்துச் சோர்வடையச் செய்வதைத் தடுக்கிறது தேகப்பயிற்சி.

தோல் வரண்டுபோய் ஓர்விதச் செதிள் படர்ந்து வியர்வை விரோசனம் இல்லாமல் செய்வதைத் தடுக்கிறது.

பிராணவாயு அதிகமாக உட்சென்று சரீராக்கினியைச் செவ் வனே எரியச்செய்து ஆங்குள்ள அசுத்தங்களை வியர்வை ரூப மாகவும் கரியமிலவாயு (Carbonic acid gas) வாகவும் வெளி யோடச் செய்கிறது. இரத்த ஓட்டம் அதிகமாக இருதயம் (Hearts) சுவாசாசயக் குழாய்கள் (Lungs) அதிக வேலை செய்யவேண்டி இருப்பதால் அக்கருவிகள் உறுதிப்படவே மார்பு விரிந்து தேகதிடத்தை உண்டாக்குகிறது.

இவ்வாறு தசைநாறுகள், எலும்புகள், நரம்புகள் திடத் தையும் சுறுசுறுப்பையும் அடையவே மூளையும் சுறுசுறுப்பாய் வேலைசெய்கிறது.

நான் எனும் அகங்கைக்காரர் இருட்படலம் நலியவும் உள மலர் விரிபவும் பிரகாசிக்கும் நமது 'ஞான சூரியன்' உலகில் நெடுநாள் நிலவ எம்பெருமான் முருகக்கடவுள் அருள்புரிவாராக.

பு. வீரப்பத் தஞ்சவராயன்.

நன்றிமறவேல்.

இவ்வாக்கியம் ஒருகட்டளையைப் பிறப்புவிக்கிறது. இதைத் தாண்டி ஒருவரும் போகக்கூடாதென்ற உறுதியைக் காண்பிக்கவே எதிர்மறையாக 'நன்றி மறவேல்' என்று வரையறுத்துக் கூறியுள்ளார் ஏனெனில் மற்ற தீச்செயல்கட் கெல்லாமேனும் ஒருவித பரிகாரம் உண்டு, நன்றி கொன்றவர்க்கு எவ்வித பரிகாரமும் கிடையாதென்பதை நன்கறிந்தும், அவ்வாறு நன்றியை ஒவ்வொருவரும் பாராட்டாது மறந்துவிடின் உயிர்வாழ்க்கைக்கே உற்பாதம் ஏற்படுமென்றும், எதுவும் பிற உதவியின்றி இயங்காது அதற்குரிய துணையாயிருப்பது நன்றி மறவாமை ஒன்றே என்றும் நன்குணர்ந்து மறவேல் என்று ஆக்ஞாபித்தார். இனி, நன்றிமறவேல் எனின் ஒரு உபகாரி செய்த்தை எக்காலத்தும் மறந்துபோகாதே என்று பொருள் படும். ஏனெனில், உலகில் வாழும் எவ்வகைப் பொருட்கும் பிறவின் உதவி வேண்டிய அவசியமாயிருக்கிறது அதின்றி எதுவும் நடைபெறாது இதையறிந்தே பகுத்தறிவில்லாத உயிர்வாழ்ப் பிராணிகளும் ஒன்றிற்கொன்று பரிந்து உதவியைச்செய்து எல்லாம் நீடிய சுகத்தை அடைகின்றன. மேலும், தம்மைப் பாதுகாக்கும் எஜமானிடம் எஜமானத் துரோகத்திற் குட்படாது போஷிக்கும் நன்றியை யுணர்ந்து அதற்கு எத்தனையோ மடங்கு மேலான உதவியை அவைகள் செய்கின்றன. உதாரணமாக கேவலம், "நாய்" தன் எஜமானன் தனக்கிடும் அற்ப உணவின் காரணமாக தன்னரிய உயிரையே திரணமாக எண்ணி பரிகொடுத்துதவுகிறது. அதின் நன்றியுணர்வின் வன்மையையும், எஜமானத்துரோக மின்மையைப் பற்றியும் எவரும் நன்கறிவர். நாயைப்போன்று நன்றியறிவது உலகில் வேறெதுவுமில்லை. பகுத்தறிவுடைய மானிடருள்ளும் இன்னும் கூர்ந்துபார்க்கின் தேவருள்ளுங் கிடையாது. பசு மானிடர் போற்றுந் தன்மைக்காக தன் உடலையே பால் முதலியவாகக் கொடுத்துதவுகிறது பின்னர் மரித்தும் பாதரக்ஷை முதலியதாக தன் தோலையே கொடுக்கிறது. மானிடரோ உயிருடனிருக்கும்போதே பிறருக் குதவிசெய்வ

இல்லை இறந்துபோய் செய்யவாபோகிறார்கள் இல்லவேயில்லை. இறந்துபோனபின்னாவது ஏதேனும் ஒருபாகமேனும் பயன்படு மோவெனின் அந்நன்று ஒன்றும் ஒரு பைசாவுக்குக்கூட உதவாது ஆனால் உடனே அவருடலைப் போக்குவதற்குத் தான் பிறர் உதவி அத்யாவசியம் வேண்டியிருக்கும். இன்னம் இவைகளேனும் உயிர்ப்பிராணிகள் என்னலாம். உயிரில்லாத எவ்வகை மரம், செடி முதலியதும் தனக்கு தண்ணீர், எரு முதலியது போட்டு பயிர் செய்வோருக்கு பூத்து காய்த்து காயாகவும், பழமாகவும், பிஞ்சாகவும், பூவாகவும் உதவுவதோடு காய்ந்தபின்னும் வீடுகள் கட்டத் தூண் உத்தரம் முதலியனவாகவும் உட்காருவதற்கு பலகை, நாற்காலி எழுதுவதற்கு மேஜையாகவும் ஜீவனார்த்தத்துக்கு முக்கிய கருவியாகிய நெருப்புண்டாக்குவதற்கு விறகாகவும் உபயோகப்படுகின்றன. அவற்றுள்ளும் கலிகால கற்பக விருக்ஷமென்று கொண்டாடப்பெறும் தென்னைமரமானது சிறுகன்றாக யிருக்கும்போது அதனடியில் ஊறிய எவ்வித நீரையும் தானுண்டு தாங்கி தன்னில் மதுரமான இளநீராகக் கொடுக்கிறது. அதன் ஒவ்வொரு பாகமும் பிறருக் குதவுகின்றன. இவ்வாறு உயிருள்ளதும், உயிரில்லாதவுமான ஓரறி ஈரறி உயிர்கள்கூட பிறருக் குதவிசெய்வதே கடமையாகக் கொண்டிருக்கும்போது கிடைத்தற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று நன்மை தீமை இன்னதென்று பகுத்தறியக்கூடிய அறிவையும் பெற்ற நாம் பிறருக்கு எவ்விதத்திலும் உதவி செய்யாதிருப்பின் அது எவ்வாறு பொருந்தும். அதைவிடப் பாவம் வேறில்லை. ஆனால் இக்கலிகாலத்தில் ஒருவன் பிறருக்குத் தீங்கு செய்யாதிருந்தாலே போதுமானது. தன்னால் பிறருக்கு உதவிசெய்ய இயலாவிடினும் அவருக்குக் கெடுதி செய்யாதும் பிறர் தனக்குச் செய்த நன்றியை மறவாதும் இருக்கவேண்டியது. ஆனால் பிறர் தனக்குச் செய்த கெடுதியை மட்டும் அந்தக்ஷணமே மறந்துவிடவேண்டும். அதுதான் ஆன்றோர்க் கழகு. ஏனெனில், "நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" ஆகலானும், "நன்றிமறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றேமறப்பது நன்று" என்றதாலும், அப்பொழுதே மறந்து அவருக்கு எவ்வித இடுக்கண் நேரிடினும் தான் முன்னின்று தீங்குசெய்தோரைக் காப்பாற்றிவிடின் அவனுக்கு அப்பொழுது தான், தான்செய்த கெடுதியை நினைத்து நினைத்துத் தானே புழுங்குவான் என்பதை அறிவுறுத்தவே "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயஞ் செய்துவிடல்" என்றார் நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்.

(இன்னும் வரும்)

எஸ். வி. ஜி. பாலன், திருவாரூர்.

கோபம்.

அன்புடையீர்!

சாதாரணமாக நமக்குப் பிறரொருவர் விருப்பமில்லாத காரியத்தைச் செய்தாலாவது, விருப்பமில்லாத வார்த்தைகளை வழங்கினாலாவது அதுபற்றி மனதில் உண்டாகும் ஓர்வித கோப நிகழ்ச்சியையே கோபம் என்றும், வெகுளி என்றும், சினம் என்றும் சொல்கிறோம். எவ்வித தர்மங்களைச் செய்தாலும் கொல்லாமை என்னும் தர்மம் மேற்கொள்ளாவிடில் எப்படி அந்த தர்மகாரியங்கள் எல்லாம் ஒருவனுக்கு தம்பயன் கொடாதோ அப்படியே ஒருவன் எவ்வித நற்குணங்களை உடையவனுயினும் வெகுளாமை என்னும் சற்குணம் ஒன்றும் இல்லாவிட்டால் அந்த நற்குணங்களெல்லாம் பிரகாசிக்கமாட்டா. புறப்பகை யாவையும் ஒழித்து தவப்புணை செலுத்திப் பவக்கடல் கடந்து ஆன்மலாபம் அடைய முயலும் துறவிகளுக்கும் உட்பகையாக நின்று அவருக்கு நட்பாகிய அருள், பொறை, ஒழுக்கம் முதலானவைகளையும் நீக்கிப் பிறவித் துன்பத்தை அடைவிக்குமாயின் அக்கோபம் மகா கொடியதன்றோ! அதுவே தீராத தீங்கிழைக்கும். கொடிய பகையாகும்.

திருவள்ளுவர்.

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

சிவஞான வள்ளலார்.

கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ.

அறப்பளீசுர சதகம்.

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்கும்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்கும்
கோபமே பழிசெயும் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையும்
கூடாம லொருவ னாக்கும்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள்ளு மால்.

ஒருவனுக்கு ஏதேனும் ஓர் காரணம்பற்றி கோபமானது அதிகமாய்விட்டால் அவன் ஏறக்குறைய பைத்தியம் பிடித்தவனாகிறான். அக்காலத்தில் அவனுக்குப் பொறுமை இல்லை; இரக்கமில்லை; நல்லது இது தீயது இது என்று பகுத்தறியும் தன்மையில்லை; தர்மசிந்தனையில்லை; பெரியோர் சிறியோர் என்ற முறையில்லை; எவ்வித நீதியுமில்லை. கொலையும் செய்யத் துணிந்துவிடுகிறான். ஆகவே, கோபியானவன் எவ்வித பழிபாவங்களுக்கும் ஆளாகிறான். அதனாலேயே, எவ்வித தீமையும் கோபத்தாலேயே உண்டாவதால் யாவரும் அக்கோபத்தை மறந்துவிடக்கடவர் என்னும் பொருளையடக்கி,

"மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்"

என்றார் பெருநாவலரும்.

வர்த்தகம் முதலிய எவ்விதத் தொழில்களையும் செய்ய முற்படுவோர் தம்மைப் பிடித்துள்ள கோபம் என்னும் கொடிய பசாசை அறிவு என்னும் மந்திரோச்சாடனத்தால் சாந்தம் என்னும் திருநீறுகொண்டு அறவே ஓட்டி பொழித்துவிடவேண்டும். இன்றேல் அக்கோபமென்னுங் கொடும்பேய், தன்னால் பிடிக்கப் பட்டவர்களின் சீரை அழித்து அவர்மேற் கொண்ட தொழிலை முற்றுப் பெறவொட்டாமல் விக்கினப்படுத்தி யாதொரு பயனையும் அளிக்காமல் செய்துவிடும். கடைக்குச் சாமான் வாங்க வருவோர் பலரும் பலமாதிரியான குணமுடையவர்களாயிருப்பார்கள். சிலர் ஒரு வஸ்துவை வாங்கிய விலைக்குங் குறைத்துக் கேட்கலாம். அதற்காக கடைக்காரர்களுக்கு அடங்காத கோபம் வந்துவிடக் கூடாது. பொறுமையாகவே கட்டும்படியான விலையைச் சொல்லவேண்டும். சில கடைக்காரர்கள், சாமான் வாங்குவோர் "ஐயா! சரியாக அளந்துபோடும்" என்றாவது, "இது கெடுதலாயிருக்கிறது மற்றொன்று கொடும்" என்றாவது சொல்வார்களானால், "இஷ்டமிருந்தால் வாங்கு கஷ்டமாயிருந்தால் போய்விடு!" நல்ல வியாபாரம் பண்ணவந்தீர் போம்! என்று வெடுவெடு என்று சீறி விழுவார்கள். இவ்வித சாந்த சிகாமணிகளுக்கு எவ்விதம் வியாபாரம் நடக்கும்? மற்ற தொழிலாளர்களுக்கும் இப்படியே.

பாடம் சொல்லும் உபாத்தியாயர்களும் சிஷ்யர்கள் ஒரு முறைக்கு இருமுறை ஒரு சந்தேகத்தைக் கூறுவார்களானால் கோபம் கொள்ளக்கூடாது. அதனால் சிஷ்யனுக்குக் குருவினிடத்தில் வெறுப்புக்கொள்வதற்கு இடமுண்டாகிறது. அதனால் சிஷ்யனுக்கும் பாடம் ஏறுவதில்லை. குருவின் போதனையும் பயனற்றதாகும். அதனாலேயே,

"விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்
கோட்டமில் மனத்தினூல் கொடுத்தலென்ப."

என்றார் நன்னூலாசிரியர். (இன்னும் வரும்)

டி. வீரப்பத் தஞ்சவராயன்.

மனுநீதிச் சோழன்.

சோணாடு சோறுடைத்து என்னும் பெருமைதங்கிய சோழ மண்டலத்தில் சூரியவம்சத்து அரசர்களுக்குரிய இராஜதானி ஐந்தனுள் ஒன்றாகிய நிறைசெல்வத் திருவாரூரில் அரசுபுரிந்த சோழ ராஜாக்களுக்குள்ளே மநுநீதிகண்ட சோழர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவித்து, செங்கோல் நடாத்தி அரசியற்றிவரும் நாளில், அவர் செய்த புண்ணிய மிகுதியினாலே அவருக்கு ஒரு நல்ல புத்திரன் பிறந்தான். அவன் பல கலைகளையும் கசடறக்கற்று வல்லவனாகி அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசு ஆவதற்குத் தக்க பருவத்தை யுடையவனாய் வாழுநாளில் ஒருநாள் இராஜமாளிகையினின்றும் புறப்பட்டு அரசகுமாரர்களும் சேனைகளும் சூழ்ந்து வரத் தேரிலேறி வீதியிற்சென்றான். அவ்வாறு செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய் அந்தத் தேர்ச்சகடத்தின் அடியில் அகப்பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப் பசு ஓடிவந்து, அலறி உடல் நடுங்கிச் சோர்ந்து கீழே விழுந்து புரண்டு பெருங் கூச்சலிட்டது. சோழபுத்திரன் அதுகண்டு, ஓ! ஓ! அபாயம் வந்துவிட்டதேயென்று மனந்தடுமாறி, பெருந் துயரில் மூழ்கி அறிவழிந்து தேரினின்றும் கீழே அடியற்ற பனைபோல் வீழ்ந்தான். அலறுகின்ற தாய்ப்பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்ந்தான். இறந்து கிடக்கின்ற இளங்கன்றைப் பார்த்து பெருமூச்சுவிட்டு இரங்கினான். நான் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பெரும்பழி தேடிவைப்பதற்கோ? என்று கலுழ்ந்தான். பிறந்த குலத்துக்குப் பெரும்புகழ் சம்பாதித்து வைப்பதற்குப் பிரதியாக நான் என்றும் அழியா அபகீர்த்தி தேடிவைத்தேனே! என்றான்.

"எழுபிறப்புந்தீயவை தீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட் பெறின்."

என்னும் முதியோர் வாக்குக்கு மாறாக நடந்து பெரும்பாவத்துக்குள்ளானேனே! என்றான். மகன் தந்தைக்குச் செய்யும் உபகாரமாவது இவனைப் பெறுதற்கு இவன் தந்தை யாது தவஞ்

செய்தானோ என்று உலகத்தார் கொண்டாடும்படி நடந்துகொள்ளுவதன்றோ? எனப் பலபலவாக யோசித்து மனந்தளர்ந்து, இனிச் சிந்தித்து நைவதில் யாதும்பயனில்லை, அபுத்தி பூர்வகமாகச் செய்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் ஏதேனும் உளதாயின் என் தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ் செய்துகொள்ளல் வேண்டும் என்று தீர்மானித்துப் பிராமணரிடத்தே சென்றான். தன் கன்றையிழந்த தாய்ப்பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது கண்ணீர் ஒழுகச்சென்று இராஜமாளிகை வாயிலிற் கட்டியிருக்கும் ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது. அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் திடுக்கிட்டு சிங்காசனத்தினின்றும் இறங்கி விரைந்து வந்து கடைவாயிலையடைய, வாயிற் காவலாளர்கள் எதிர்வந்து வணங்கி மஹாராஜாவே! இங்கே ஒருபசுவந்து ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது என்று விண்ணப்பம் செய்தார்கள். மனுநீதிகண்ட சோழர் அதுகேட்டு வருந்தியலறுகின்ற பசுவைப் பார்த்து இதற்கு யாது இடையூறு சம்பவித்தது? என்று மந்திரிகளைக் கோபித்துப் பார்க்க, அம்மந்திரிகளுள் ஒருவன் வணங்கி நின்று, பூமண்டலேஸ்வரா! உம்முடைய புத்திரன் தேர்மேலேறி வீதியிற் போம்பொழுது ஒரு பசுக்கன்று துள்ளியோடி வந்து அத்தேர்க்காலில் அகப்பட்டிறந்தது, அதன் தாயாகிய இப்பசு இங்குவந்து ஆராய்ச்சிமணியை அடித்தது என்று விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்ட மநுநீதிகண்ட சோழர் பெருந்துயரங் கொண்டு இரங்கி ஏங்கி, கன்றையிழந்த தாய்ப்பசுவின் முகத்தைப்பார்த்து உள்ளம்பதைத்து என் செங்கோன் முறைமை நன்றாயிருக்கிறது என்றார். இதற்கு என்னசெய்தால் தீரும் என்று வருந்தினார்.

"ஆடுங்கடைமணி நாவசையாமல் அகிலமெல்லாம்
நீடுங்குடையைத் தரித்தபிரான்."

என்று உலகத்தோர் போற்றும்படி இதுவரையில் அரசு செய்து வந்த எனக்கு இன்று ஒரு பிள்ளையால் அபகீர்த்தி வந்து சம்பவித்ததே! என்று மனந்தளர்ந்தார்.

"அல்லற்பட்டாற்றாதழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும்படை.

என்னும் சான்றோர் வாக்கின்படி, அரசன் நீதிவழுவாமல் முறை செய்யாதபடியால், குடிகள் துன்பப்பட்டு அதனைப் பொறுக்க மாட்டாமல் அழுதகண்ணீர் அரசன் செல்வத்தைத் தேய்க்கும் படையாயிற்றே! என்றார். இவ்வாறு துக்கக்கடலில் மூழ்கி ஒன்றுந் தோன்றாமல் தியக்கமடைந்திருக்கும் சோழமகாராஜாவை மந்திரிகள் நோக்கி, எம்மரசே! மனந்தளர்ந்து ஏக்கமுறுவது இதற்குப் பரிகாரமாகாது, கோவதைக்குத் தருமநூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தை உம்முடைய புத்திரனைக்கொண்டு செய்விப்பதே தருமம் என்றார்கள். அதற்கு மநுநீதிகண்ட சோழர் நீங்கள் கூறும் பிராயச்சித்தம் கன்றை யிழந்தலறும் இப்பசுவின் துக்கநோய்க்கு மருந்தாகுமா? நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லோரும் சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனுயின் நடுவுநிலைமை தவறாதா? உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும் ஏனைய உயிர்களாலும் வரத்தக்க பயத்தைநீக்கி அவைகளைக் காப்பவனன்றோ அரசனெனப்படுவான்? என் புத்திரன் செய்த பாவத்தின்பொருட்டு பிராயச்சித்தஞ் செய்வதற்கு உடன்பட்டுப் பிறனொருவன்செய்த பாவத்திற்கு அவனைக் கொல்வேனாயின், பூர்வம் மநுவினால் செய்யப்பட்ட தருமநூல்விதி என்னால் கடக்கப்பட்டதென்னும் பழிமொழி உலகில் என்றும் நிலைபெறாதா? என்றார். அப்போது, மந்திரிகள் சித்தங்கலங்கி, மஹாராஜாவே! இவ்வுலகில் இதுபோல் முன்னும் நடந்திருக்கின்றதே, இக்குற்றத்தின்பொருட்டு உம்முடைய புத்திரனைக் கொல்லுதல் முறையன்று, தருமநூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே பண்டுதொட்டு மேலோர் வழங்கிய கொள்கை என்றார்கள். அதற்கு மநுநீதிகண்ட சோழர் நீங்கள் கூறிய தரும நெறி

(இன்னும் வரும்)

வடலூர் வள்ளல்.

வைத்தியம்.

(ஆபத்சகாயம்)

இது யோகிகட்கும் இல்லற வாசிகட்கும் பொருத்தமான வயித்திய முறை.

நன்னாரிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஆவின்பாலில் (20) நாள் கொள்ள, மூலக்கொதிப்பு, அஸ்தி காங்கை, மேகச்சூடு, மேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர் இற்று விழுதல், மூத்திரக்கிரிச்சரம், பதினெட்டுச் சில்லரை விஷசெந் துக்களின் கடிவிஷங்கள், உள்வறட்சியினல் காணும் இருமல், தாபசோபம் இவைகள் நீங்கும். சீரகம், மல்லியும் இவ்வேரு டன் சமனாகச் சேர்த்துச் சூரணித்துச் சர்க்கரை கலந்து சாப் பிட்டுவந்தாலும் ஷெ வியாதிகள் நீங்கும். இவ்வாறு நாட்படச் சாப்பிட்டுவந்தால் நரை திரைகளும் மாறும்.

பொற்சிந்திவேரை அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவாக ஆவின்பாலிற் சாப்பிட்டுவர, சகல மேகங்களும், சகல விஷக்கடி களும், சுரம், தோஷம், கபாலச்சூடு, வெட்டைகளும் நீங்கும். இம்மூலிகைத் தண்டின்மாவும், வில்வப்பூவும் கோரோசனையும் சமன்கலந்து திரிகடிப்பிரமாணம் எருமைமோரில் உட்கொள்ள மேகநீரிழிவு நீங்கும். இவ்வாறு நாட்படச்சாப்பிட அவமிருத்து விலகும். தேகம் பொன்போலாகும்.

பூமிசர்க்கரைக் கிழங்கை பாலிற்கொள்ள, பாண்டு, விஷ பாக வீக்கம், மூத்திரக்கிருச்சரம், மேகம், வெட்டை தீரும். இதைப் பாலில் அவித்துக் காயவைத்துத் தூளாக்கி, உழுந்து வறுத்துப் பொடித்த மாவும் எள்ளுப்பொரியும் சமன் கூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர, தேக பலமுண்டாம். நாதம் கட்டும். நாவில் அமுதம் ஊறும்.

குறட்டை மூலத்தை பாலிற்கொள்ள நரை திரை மாறும். சரஸ்வதி கடாட்சமுண்டாம்.

(இன்னும் வரும்)

(க. ஞானபூபதி.)

காலண்டர்கள் வரவு.

புதுவை 'கற்பகம்' பத்திராதிபர் அவர்களால் வெளியிடப்பட்ட இங்கிலீஷ் தமிழ் தேதிகளும், விசேஷ உற்சவாதிகள், விரதாதிகள் சேர்ந்து பன்னிரு மாதங்களுக்கும் முறையே 12 காகிதங்களில் அச்சிட்ட காலண்டர் ஒன்றும், ஷியூர் 'சுகாபி விருத்தினி' பத்திராதிபர் அவர்களால் வெளியிடப்பட்ட காலண்டர் ஒன்றும் நமது பார்வைக்கு அனுப்பியதற்கு மனமார்ந்த வந்தனமளிக்கிறோம். பத்திராதிபர்.

மதிப்புரைகள்.

தேசசேவகன்:—இது புதுவையிலிருந்து பிரதி மங்களவாரமும் வெளிவருகின்றது. இதன் பத்திராதிபர் பழநி சின்னைய இரத்தினசாமி நாயுடு அவர்கள். நமது நாட்டு இந்து முஸ்லீம் சகோதரர்களை முன்னேற்ற மடையும்படி செய்யவேண்டுமென்பதே இவருடைய முக்கிய நோக்கமாயிருந்து வருகிறது. இதன் பெயருக்கேற்ப குற்றங் கண்டவிடத்து கண்டிக்கும் குணங்கண்ட விடத்தில் புகழ்ந்தும் வீராவேசத்துடன் கற்றோர்கள் மனதைக் கவரும்வண்ணம் வெளிவந்துலாவுவதானது புதுவையர்பதி செய்த பெரும்பாக்கியம் என்றே கருதுகின்றோம். வருட சந்தா ரூ. 6—0—0

சுகாபி விருத்தினி:—இந்த சஞ்சிகையானது ஸ்ரீமான். நா. வேங்கடாசல நாயக்கர் அவர்களால் பட்சத்துக் கொருமுறை புதுவையினின்று வெளிவந்துலவுகிறது. தன்பெயருக்கேற்ப மாந்தர்கள் சுகாசுகங்களின் தாரதம்மியத்தை நன்கு விளக்குவதுடன் தேச க்ஷேமத்தைப் பற்றியும் உழைத்து வருகிறது. வருட சந்தா ரூ. 2—0—0

கற்பகம்:—இப்பெயர் புனைந்த மாதசஞ்சிகையானது 'கற்பக தருவைச் சார்ந்த காகமும் அமிர்த முண்ணும்' என்ற ஆன்றோர் வாக்கியத்துக்கிணங்க ஆன்மகோடிகளுக்கு ஹிதோபதேச வசனாமிருதத்தை பொழிந்து வருகிறது. இது புதுவைமாநகரிலிருந்து சுமார் 8 வருஷ காலமாக வெளிவந்துலவுவதாக அறிகிறோம். வருட சந்தா ரூ 1—0—0

விஸ்வகர்மன்:—இது சென்னை சிந்தாதிரிப் பேட்டையிலிருந்து வாரம் ஒருமுறை வெளிவருகின்றது. விஸ்வ குலாபிமானிகளுக்கு பெரிதும் பயன் தருவதோடு தேசிய நன்மைகளில் வீராவேசத்துடன் தலையிட்டு பொது ஜனங்களுக்கு அதிக ஊக்கத்தை ஊட்டி வருகிறது. பத்திராதிபர், மங்கலம். திபாக சுந்தர வேதாசல ஆச்சாரி பி. ஏ., அவர்கள். வருட சந்தா ரூ. 4—0—0

புத்தகங்களின் வரவு:—நன்னிலம் சேதுராமய்யர் அவர்கள் குமாரரான சென்னை முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல் மகா-ா-ஸ்ரீ. என். எஸ். இராமச்சந்திரய்யர் பி. ஏ., எல். டி., அவர்கள் இயற்றிய அஷ்டோத்திர சதநாமாவளியும், கந்தபிரான் கதம்பமாலையும், கந்தரகவலும் ஆகப் புஸ்தகங்கள் மூன்றும் வரப்பெற்றோம். இந்நூற்களானது பண்டைய காலத்துத் தமிழ் வித்வான்களின் இனிய தமிழ் மொழிகளைப்போல் சொற்சுவை பொருட் சுவை நிரம்பப்பெற்றதாக பதிகங்களும், திருப்புகழ் முதலான பாக்களும் நிறைந்துள்ளது.

குறிப்பு:— அடுத்த மாதம் முதற்கொண்டு வேறு சில பத்திரிகைகளுக்கும் புஸ்தகங்களுக்கும் மதிப்புரை எழுதப்பெறும்.

அறிவிப்பு.

நல்ல சமயம்! கவனியுங்கள்!! நல்ல சமயம்!!!

TYPE WRITING MACHINE.

எங்களிடம் ரெமிங்டன் (Remington) டைப் ரைட்டிங் மிஷின் ஒன்று விற்பனைக்குத் தயாராக இருக்கிறது. வேண்டுவோர் விலை விபரம் முதலானவைகளுக்கு அடியிற்கண்ட எங்களிடம் தெரிந்துகொள்ளலாம். விலை சரசமாய்க் கொடுக்கப்படும்.

☞ 'மானேஜர்'
கருணாநிதி வர்த்தகசாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா.

ஞானசூரியன் காலண்டர்:—ஒவ்வொரு சந்தாதாரர்கட்கும் 1923-வது வருடத்திய நமது 'ஞான சூரியன்' காலண்டரை தைமாதப் பத்திரிகையோடு இனாமாக அனுப்பியிருக்கிறோம்.

பத்திராதிபர்.

விளம்பரம்.

மதுரை எ. சுந்தரராஜலு நாயுடு அவர்களால் தயாரிக்கப்பட்ட வாசனைப் புகையிலை, பற்பொடி முதலானவைகளை ஒவ்வொருவரும் கட்டாயம் வாங்கி உபயோகித்து நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற விபரங்கள் நோட்டீஸ் மூலியமாய்த் தெரிந்துக்கொள்ளலாம்.

வாசனைப் புகையிலை டப்பி 1-க்கு	0	10	0
பற்பொடி டப்பி 1-க்கு	0	4	0

☞ பி. எம். குமாரசாமி,
சோல் ஏஜெண்டு,
1—2, சைவ முத்தையா முதலி தெரு, சென்னை.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.